ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2181/26 - 2020 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26
*2181/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இல. : KO/DS/AD/FIL/68-16.
காணி அமைச்சின் இல. : 4-3/2/2016/CEB/94.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 502அ, உடுமுல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவில், உடுமுல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2020.02.28 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இல. "மூ.பி.கொ. 9885" இல் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 0.01914 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய மில்லகஹவத்த எனக் குறிப்பிடப் படும் காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**வரைபட இல. "மூ.பி.கொ. 9885"**

*01. துண்டு இல. 01*

காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வெற்றுக்காணி; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : ஏ. எம். என். டி. ஆரியரத்ன, இல. 371/1, உடுமுல்ல, முல்லேரியா புதிய நகர்; விஸ்தீரணம் : 0.01914 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொலொன்னாவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். ஏ. பீ. ஜயகொடி,
பிரதேச செயலாளர்,
கொலொன்னாவை.

பிரதேச செயலகம்,
கொலொன்னாவை,
2020, யூன் 25.

7 - 294


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : KHDS/LND/03/ACQ/VIL/13-03.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல. : 4-3/15/2017/VE/428.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், அடகலன் கோரளை சிறு பிரிவில், இல. 227-B, அன்தான கிராம அலுவலர் பிரிவில், அன்தான கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்த தயாரிக்கப்பட்ட ஆ. வ. இல. 25, மேலதிக இல. 7, தாள் இல. 8 மற்றும் 2019.11.30 ஆந் திகதியுடைய துண்டு இல. 84 எனக் காட்டப்பட்டுள்ள, 2.6976 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**01. துண்டு இல. 84**

காணியின் பெயர் : மஹகுபுருஹேன, கெடவலகாஹேன மற்றும் தங்காஹேன; விபரம் : 20 - 30 வருடம் மூடப்பட்ட தேயிலை பயிர்ச்செய்கை; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : கஹவத்தை பெருந்தோட்டக் கம்பனி, இல. 52, மாளிகாவத்தை பாதை, கொழும்பு 10; விஸ்தீரணம் : 2.6976 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி. டி. கயானி ஐ கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கஹவத்தை,
2020, யூன் 17.

7 - 295

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : RBK/LAN/AQURE/A3/15.
காணி அமைச்சின் குறிப்பு இல. : LD/05/2007/Z/283.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 9 B, யோதகம கிராம அலுவலர் பிரிவில், யோதகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் கே/3761 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : தொடம்கஸ்தென்ன புரண; விபரம் : தோட்டம், சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறொன்று உள்ளது; உரிமை கோருபவர் : துனுகல் பேடிகே குணவதீ; விஸ்தீரணம் : 0.0949 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ரம்புக்கனை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,
பிரதேச செயலாளர்,
ரம்புக்கனை.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2020, யூன் 18.

7 - 325

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.